# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 | வள்ளுவர் ஆண்டு 2055 | புரட்டாதி 20 திங்கட்கிழமை | 06.10.2025 | கதிர் 331









# இலங்கை தொடர்பான பிரேரணை வாக்கெடுப்பின்றி நிறைவேற்றம்!

ஜெனிவா, ஒக். 06

இலங்கை தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இறுதியாக இன்று சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணை வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டுள்ளது.

இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல் எனும் தலைப்பில் பிரிட்டன் தலைமையிலான இணை அனுசரணை நாடுகளால் இந்தப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது.

ஏற்கனவே கடந்த மாத ஆரம்பத்தில் இந்தப் பிரேரணையின் முதலாவது வரைபு சமர்ப்பிக்கப்பட்டது. பின்னர் அதில் பல திருத்தங்கள் செய்யப்பட்டன.

அந்தவகையில், திருத்தப்பட்ட இறுதி வரைபு இன்று சமர்ப்பிக்கப்பட்டு, இன்றைய தினமே வாக்கடுப்பின்றி நிறைவேற்றப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

காணி உறுதி மோசடி குற்றச்சாட்டில்

## யாழ்ப்பாணத்தில் கைதான சட்டத்தரணிக்குப் பிணை!

யாழ்ப்பாணம் ஒக், 06

யாழ்ப்பாணத்தில் காணி உறுதி மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைதான சட்டத்தரணி 10 இலட்சம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.



யாழ். பொம்மைவெளிப் பகுதியில் காணி ஒன்றின் உறுதி எழுதியதில் 7

அநுரவுக்கு ஏன் அதிக நிதி?

## காரணத்தை வெளிப்படுத்துமாறு ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து



கொழும்பு, ஒக். 06

“ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க 2026ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தில் ஜனாதிபதிக்கான செலவுகளுக்காக 11.37 பில்லியனை ஒதுக்கியிருக்கின்றார். இது 7



## வவுனியா விபத்தில் இளைஞர் மரணம்!

வவுனியா, ஒக். 06

வவுனியா - இராசேந்திரம் குளம் பகுதியில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து 7



## போதைப்பொருளுடன் இருவர் அம்பாறையில் நேற்று கைது!

அம்பாறை, ஒக், 06

அம்பாறை மாவட்டத்தில் வெவ்வேறு இடங்களில் போதைப்பொருளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக கல்முனை விசேட அதிரடிப் படையினர் தெரிவித்துள்ளனர்.

பெரியநீலாவணை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் ஐஸ் போதைப்பொருள் மற்றும் ஒரு தொகை பணத்துடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக கல்முனை விசேட அதிரடிப் படையினர் தெரிவித்துள்ளனர்.

கல்முனை விசேட அதிரடிப் படை புலனாய்வு பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய கல்முனை விசேட 7

# தபால்மா அதிபரின் கருத்திற்கு கடும் எதிர்ப்பு

கொழும்பு, ஒக் .06

அஞ்சல் ஊழியர்கள் முறைக்கேடாக மேலதிக கொடுப்பனவை பெற்றுள்ளதாக தபால்மா அதிபர் வெளியிட்ட கருத்திற்கு கடும் அதிருப்தி தெரிவிப்பதாக தபால் தொழிற்சங்க ஒன்றியம் தெரிவித்துள்ளது.

அதன்படி, தபால்மா அதிபர் தெரிவித்த கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், எதிர்வரும் 9 ஆம் திகதி கருப்புப்பட்டி அணிந்து பணிக்கு வருவோம் என்று தபால் மற்றும் தொலைத்தொடர்பு அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் ஜி.ஜி.சி. நிரோஷண தெரிவித்தார். இதற்கிடையே, எந்தவொரு விசாரணையும் இல்லாமல் தபால்மா அதிபரால் பணியாளர்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை கடுமையாக எதிர்ப்பதாக ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்க முன்னணியின் இணை ஒருங்கிணைப்பாளர் சிந்தக பண்டார தெரிவித்தார்.

சமீபத்தில் ஹப்புத்தளையில் நடைபெற்ற விழாவில் பங்கேற்ற தபால்மா அதிபர் ருவன் சத்குமார, தபால் துறை ஊழியர்கள் தங்கள் கைரேகையைப் பதிக்காமல் கோடிக்கணக்கான மேலதிக கொடுப்பனவுகளை பெற்றுள்ளதாகவும், தபால்சேவையில்நிகழும்பல முறைகேடுகள் குறித்தும் கருத்து வெளியிட்டிருந்தார். (ஐ)

# ரயிலில் மோதி இரு இளைஞர்கள் பலி



கொழும்பு, ஒக் .06

கடுகண்ணாவை ரயில் நிலையத்திற்கு அருகில் ரயிலில் மோதி ஒருவர் உயிரிழந்தார்.

கண்டியில் இருந்து பொல்கஹவெல நோக்கிச் சென்ற ரயிலில் மோதியே குறித்த நபர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் அக்குரஸ்ஸ - கனத்தொட்ட பகுதியைச் சேர்ந்த 27 வயதான இளைஞர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில், மன்னார் புதுக்குடியிருப்பு பகுதியிலும் ரயிலில் மோதி ஒருவர் உயிரிழந்தார்.

தலைமன்னாரில் இருந்து கொழும்பு கோட்டை நோக்கிச் சென்ற ரயிலில் மோதியே குறித்த நபர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் புதுக்குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த 32 வயதான இளைஞர் என தெரியவந்துள்ளது. (ஐ)

# பசறை - லுணுகலை வீதியில் மண்சரிவு

கொழும்பு, ஒக் .06

பதுளை மாவட்டத்தை பாதித்துள்ள சீரற்ற வானிலை காரணமாக, பசறை 13வது மைல்கல் அருகில் மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

அதன்படி, பாறைகள் விழுந்து வீதி தடைபட்டுள்ள நிலையில், தற்போதுள்ள ஆபத்து காரணமாக, ஒரு மருங்கை மாத்திரம் திறந்து வைக்க வீதி அபிவிருத்தி அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது. அத்துடன் பசறை, கனவெரெல்ல மேற்கு, ஹெலபொல பகுதியில்ஏற்பட்ட மண்சரிவு காரணமாக, அங்கு வசிக்கும் மூன்று குடும்பங்களை வெளியேற்றி பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்ப பசறை பிரதேச செயலாளர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதற்கிடையில், பலத்த மழையை கருத்தில் கொண்டு, பல மாவட்டங்களின் பிரதேச செயலக பிரிவுகளுக்கு விடுக்கப்பட்ட மண்சரிவு எச்சரிக்கையின்படி, அந்தப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அடுத்த சில நாட்களில் மழை பெய்யக்கூடும்என்று வளிமண்டலவியல் திணைக்களம் ஏற்கனவே தெரிவித்துள்ளதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

பதுளை மாவட்டத்தில் ஹாலி எல, எல்ல, பதுளை, பசறை, குருநாகல் மாவட்டத்தில் நாரம்மல, மாத்தளை மாவட்டத்தில் உக்குவெல, ரத்தோட்டை, மொனராகலை மாவட்டத்தில்படல்கும்புர, பிபில மற்றும் நுவரெலியா மாவட்டத்தில் கொத்மலை ஆகிய பகுதிகளுக்கு தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் நேற்று மண்சரிவு எச்சரிக்கை அறிவிப்பை வெளியிட்டது.

இந்த அறிவிப்பு நேற்று மாலை 06.00 மணி வரை அமுலில் இருந்த நிலையில், மழை தொடர்ந்து பெய்து வருவதால், இந்த பகுதிகளில் வசிக்கும் மக்கள் அது குறித்து கவனம் செலுத்த வேண்டும் என்று அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது. வீதியின் இருபுறமும் ஆபத்தான பகுதிகளைக் கடந்து செல்லும்போது வாகன சாரதிகள் கவனமாக இருக்க வேண்டும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

அதேநேரம் வீதியின் இருபுறமும் வர்த்தகம் செய்பவர்கள் ஆபத்தான பகுதிகளில் வர்த்தகம் செய்தால், அந்த இடங்களை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடத்திற்குச் செல்ல வேண்டும் என்றும் அந்த நிறுவனம், பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

மண்சரிவுக்கான அறிகுறிகள் காணப்பட்டால், அப்பகுதியின் கிராம உத்தியோகத்தர் மற்றும் பிரதேச செயலாளருக்கு அறிவிக்குமாறும், அதன்படி மாவட்டத்தில் உள்ள தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் மாவட்ட அலுவலகத்திற்குத் தெரிவித்து, தேவையான அறிவுறுத்தல்களைப் பெற்று, தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம், பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (ஐ)

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பிவிட்) எல்டிடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்திய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிறை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden -
Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# யாழ். பல்கலைக்கழகம் ஸ்தாபிக்கப்பட்டு 50 ஆண்டுகள் நிறைவு




யாழ்ப்பாணம் , ஒக் .06

யாழ்ப்பாண பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டு 50 ஆண்டுகள் கடந்த நிலையில் இன்று பொன் விழா கொண்டாட்டங்கள் யாழ் பல்கலைக்கழக வளாகத்தில் கோலாகலமாக ஆரம்பமாகியுள்ளது.

ஈழத் தமிழர்களின் தனிப்பெரும் அடையாளங்களில் ஒன்றாகத் திகழும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஸ்தாபிக்கப்பட்டு ஐம்பது ஆண்டுகளை நிறைவு செய்து, இன்று பொன்னகவைப் பெருவிழா காண்கிறது.

ஐம்பதாவது ஆண்டைக் கடந்திருக்கும் இப்பல்கலைக்கழகத்தின் பன்னிரண்டு பீடங்களும் இணைந்து பொன்விழா நிகழ்வை இன்று வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றது.

காலை 09.00 மணிக்கு ஆரம்பமான பொன் விழா நிகழ்வில் இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் கபில செனிவிரத்ன பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டிருந்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் உப தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் கே. எல். வசந்தகுமாரவும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டிருந்தனர்

பல்கலைக்கழகத்தின் ஐம்பது வருடகால கல்விப் பணி வரலாற்றை எடுத்தியம்பும் வகையில் அமைந்த வரலாற்றுப் பொக்கிஷமான "யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பொன்அகவை வரலாறு" எனும் நூலும், பல்கலைக்கழகத்தின் பொன்னகவையை நினைவு கூரும் வகையிலான நினைவு முத்திரை வெளியீடும நடைபெற்றது. (ஐ)

# சிறுவர்களை தவறாக வழிநடத்தும் அரசாங்கம் காவிந்த ஜயவர்தன கடும் விசனம்




கொழும்பு, ஒக் .06

நாட்டின் சொத்துக்களான சிறுவர்களை தவறாக வழிநடத்துவதற்கான சூழலை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் உருவாக்கிக் கொண்டிருக்கிறது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

சபைமுதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க 16 வயது பூர்த்தியடைந்த சிறுவர்கள் பாலியல் உறவில் ஈடுபட முடியும் என பாராளுமன்றத்தில் கூறுகின்றார்.

இந்நாட்டில் சிகரட் கொள்வனவு செய்வதற்கு 21 வயதுக்கு மேற்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்பது சட்டமாகும். இவ்வாறான நாட்டில் 16 வயதுடையோருக்கு இதுபோன்ற சுதந்திரம் வழங்கப்பட்டால் 2500 ஆண்டுகள் பழமையான பௌத்த தேரவாதத்தை பின்பற்றும் தாய்நாட்டின் ஒழுக்கத்துக்கு என்னவாகும்?

பௌத்தம் மாத்திரமின்றி ஏனைய அனைத்து மதங்களும் சிறுவர்களுக்கு கற்றுக் கொடுக்கும் ஒழுக்கத்தை சீரழிக்கும் வகையிலேயே சபை முதல்வரின் கருத்து அமைந்துள்ளது.

16 வயது சிறுமியொருவர் கர்ப்பம் தரித்தால் அந்த சிறுமிக்கு அமைச்சர் பிமல் ரத்நாயக்க வழங்கும் பதில் என்ன? கடந்த வாரத்தில் இருவேறு பிரதேசங்களில் பிறந்த சிசுக்கள் வீதியிலிருந்து கண்டெடுக்கப்பட்டன. இவ்வாறான திருமணத்துக்கு முன்னதான பாலியல் உறவுகளால் எயிட்ஸ் உள்ளிட்ட நோய்கள் அதிகரிக்கும் அபாயம் காணப்படுகிறது.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டு எயிட்ஸ் நோயாளர்களின் எண்ணிக்கை 17 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

இவ்வாறிருக்க தன்பாலீர்ப்பினரை அடிப்படையாகக் கொண்ட சுற்றுலாத்துறை மேம்படுத்தும் முயற்சிகளையும் முன்னெடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

ஜனாதிபதியும், வெளிவிவகார அமைச்சரும் தான் இதனை அனுமதிக்கவில்லை எனக் கூறினாலும், சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையில் இது குறித்த கடிதத்தை அனுப்பியவர்களுக்கு எதிராக இதுவரையில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

குறித்த கடிதம் இன்றுவரை மீளப் பெறப்படவும் இல்லை என தெரிவித்தார். (ஐ)

# அதிக விலைக்கு அரிசி விற்ற 135 கடைகள் மீது வழக்கு

கொழும்பு, ஒக் .06

அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்த 100க்கும் மேற்பட்ட கடைகள் மீது சட்ட நடவடிக்கை எடுத்து வருவதாக நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

கடந்த மாதத்தில், நாடு முழுவதும் நடத்தப்பட்ட சோதனைகளில் 135 கடைகளின் வர்த்தகர்குக்கு எதிராக வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்பவர்கள் மற்றும் அதை மறைப்பவர்களுக்கு எதிராக சோதனைகள் தொடரும் என்று நுகர்வோர் விவகார அதிகாரசபை மேலும் தெரிவித்துள்ளது.

தனி உரிமையாளர் அதிக விலைக்கு அரிசி விற்று, அவர் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டால், அவருக்கு 100,000 ரூபாய் முதல் 500,000 ரூபாய் வரை அபராதம் அல்லது 5 மாதங்கள் சிறைத்தண்டனை அல்லது இரண்டும் விதிக்கப்படலாம் என்று அதிகாரசபை தெரிவித்துள்ளது.

ஒரு தனியார் நிறுவனம் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டால் நீதிமன்றம் 500,000 ரூபாய் முதல் 5,000,000 ரூபாய் வரை அபராதம் விதிக்கலாம், அபராதம் அல்லது சிறைத்தண்டனை அல்லது மேற்கூறிய இரண்டும் விதிக்கப்படலாம்.

அத்துடன் அதிக விலைக்கு விற்பனை செய்த பொருட்களை அதிகாரசபையின் சட்டத்தின் கீழ் அரசுடமையாக்கவும் நீதிமன்றத்தால் முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் இரண்டாவது முறையாகக் குற்றம் செய்தால், அபராதத் தொகையின் இரு மடங்கு அபராதமும், ஒரு வருடம் வரை சிறைத்தண்டனையும் விதிக்க நுகர்வோர் விவகார அதிகாரசபைச் சட்டத்தின் கீழ், நீதிமன்றத்திற்கு அதிகாரம் உள்ளதாக அந்த அதிகாரசபை மேலும் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், சந்தையில் தற்போது கீரி சம்பாவிற்கு இன்னும் பற்றாக்குறை நிலவுவதாக வியாபாரிகள் கூறுகின்றனர்.

அதிகாரிகள் இந்தப் பிரச்சினையில் கவனம் செலுத்தி, இது தொடர்பாக அவசர நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (ஐ)

# மஹிந்தவின் பாதுகாப்புக்கு உதவ தயாராகும் இரு முக்கிய நாடுகள்?



கொழும்பு, ஒக் .06

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்புக்காக உதவத் தயாரென பிரதான இரண்டு நாடுகள் உறுதிமொழி வழங்கியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

மஹிந்த பயன்படுத்திய புல்லட்ப்ரூவ் எனப்படும் குண்டுகள் துளைக்காத வாகனங்களை அரசாங்கம் மீளப்பெற்றுள்ள நிலையில், அப்படியான வாகனங்களை மஹிந்தவுக்கு வழங்க முடியுமென இரு நாடுகள் மஹிந்தவிடம் தெரிவித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இராஜதந்திர சிறப்புரிமைகளைப் பயன்படுத்தியா அல்லது நன்கொடையாக வழங்கும் அடிப்படையிலா இந்த உதவி வழங்கப்படவுள்ளதென்பது பற்றி இன்னும் தெரிய வரவில்லை.

எவ்வாறாயினும் சம்பந்தப்பட்ட இரண்டு நாடுகளின் தூதுவர்கள் இது தொடர்பில் மஹிந்தவிடம் முன்வைத்த கோரிக்கைக்கு மஹிந்த தரப்பிலிருந்து இதுவரை பதில் வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் பாதுகாப்பு தொடர்பில் பாதுகாப்பு செயலாளர் மற்றும் பொலிஸ் மா அதிபருடன் அடுத்த வாரம் சந்திப்பொன்றினை நடத்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன முடிவு செய்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் வாகனங்களை அரசாங்கம் கையகப்படுத்தியுள்ளதால், அவருக்கு பாதுகாப்பு வழங்குவதில் கடுமையான சிக்கல் ஏற்பட்டுள்ளதால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக முன்னாள் ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி மனோஜ கமகே கூறியுள்ளார். (ஐ)

# மின்சார சபை பொறியாளர்கள் சங்கத்தின் எச்சரிக்கை

கொழும்பு, ஒக் .06

இலங்கை மின்சார சபை பொறியாளர்கள் சங்கம் இன்று முதல் தனது தொழிற்சங்க நடவடிக்கையை தீவிரப்படுத்தப்போவதாக தெரிவித்துள்ளது.

அதன்படி, மின்சார சபையின் சிரேஸ்ட அதிகாரிகளுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் இன்று முதல் நிறுத்தப்படும் என்று அதன் செயற்குழு உறுப்பினர் தனுஷ்க பராக்கிரமசிங்க தெரிவித்தார்.

தங்கள் கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால், எதிர்காலத்தில் கடுமையான தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவோம் என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதற்கிடையில், மீண்டும் ஒருமுறை மின்சார கட்டணத்தை அதிகரிக்கும் அரசாங்கத்தின் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிப்பதாக மின்சார பயனாளிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அதன் தலைவர் எம்.டி.ஆர். அதுல இதனைத் தெரிவித்தார்.

இந்த நேரத்தில் மின்சார கட்டணத்தை அதிகரிக்க வேண்டிய அவசியமில்லை என்று இலங்கை மின்சார சபை புதிய ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் பிரியந்த விக்ரமசிங்கவும் கூறினார்.

மின்சாரக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டால், அது கட்டுமானத் துறைக்கு கடுமையான சிக்கலை ஏற்படுத்தக்கூடும் என்று தேசிய கட்டுமானத் தொழிலாளர் சங்கத்தின் செயலாளர் சுபுன் அபேசேகரவும் சுட்டிக்காட்டினார். (ஐ)

# அனைத்து அரசு பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் சி மற்றும் டி பிரிவு தொழிலாளர்களுக்கு 20% போனஸ்: முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு




அனைத்து அரசு பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் ‘C’ மற்றும் ‘D’ பிரிவு தொழிலாளர்கள்மற்றும்பணியாளர்களுக்கு 20 விழுக்காடு வரை மிகை ஊதியம் மற்றும் கருணைத் தொகை வழங்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், “ இந்தியத் திருநாட்டின் இரண்டாவது மிகப்பெரிய பொருளாதாரமிக்க மாநிலமாக தமிழ்நாட்டை நிலைநிறுத்துவதில் தொழிலாளர்களின் பங்கு மிகவும் முக்கியமானதாகும். இவர்களின் உழைப்பின் பலனாக தமிழ்நாடு பொருளாதார வளர்ச்சியை மட்டுமல்லாது, அந்நிய முதலீடுகளையும் ஈர்த்துவருகிறது. 2024-25ம் ஆண்டுக்கான தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி விகிதமான 9.69 சதவீதம் என்பது நாட்டின் பிற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் மிக உயர்ந்ததாகும் என்பதோடு, கடந்த 4 ஆண்டுகளில் தமிழ்நாடு பெற்றிருக்கும் மிக உயர்ந்த வளர்ச்சியுமாகும். இவ்வளர்ச்சியை எட்டுவதில் அரசுத் துறை, பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் தனியார் துறைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள், பணியாளர்கள் மற்றும் அலுவர்கள் அனைவரின் அயராத உழைப்பும் அர்ப்பணிப்பும் முக்கிய பங்களிப்பாக அமைந்துள்ளது.

பல்வேறு பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் மாநிலத்தின் முன்னேற்றத்திற்குத் தூண்களாக திகழ்கிறார்கள். மேலும், நாட்டில் பெண்கள் அதிக அளவில் பணியாற்றும் மாநிலங்களில் ஒன்றாகத் தமிழகமும் திகழ்கிறது. பெண்கள் அதிகாரமடையவும், சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்தை அடையவும் தமிழ்நாடு அரசு பல்வேறு முன்னேற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. பெண்களுக்கான இலவச பேருந்து பயணத் திட்டமான “விடியல் பயணம்” திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளதுடன், எளிதில் ஏற்கக்கூடிய குறைந்த வாடகையில் பணிபுரியும் பெண்களுக்கான விடுதிகள் பல இடங்களில் நிறுவப்பட்டுள்ளன. மேலும், மாநிலத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் பணிபுரியும் பெண்களுக்கான விடுதிகளின் கட்டுமானப் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. பல்வேறு பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் சக்தியே ஒரு நாட்டை உயர்த்தும் என்பதையும், உற்பத்தியைப் பெருக்கி பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்துவதிலும் இவர்களின் பங்கு முக்கியமானது என்பதையும் கருத்தில் கொண்டு, பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளிக்கும் வகையில் 2024-25 ஆம் ஆண்டுக்கான மிகை ஊதியம் மற்றும் கருணைத் தொகையை வழங்குமாறு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

திருத்தப்பட்ட போனஸ் சட்டம், 2015 படி, மிகை ஊதியம் பெறத் தகுதியான சம்பள உச்சவரம்பு ரூ.21,000 எனவும், இதன்படி மிகை ஊதியம் கணக்கிட மாதாந்திர சம்பள உச்சவரம்பு ரூ.7,000 எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி உச்சவரம்பை தளர்த்தி, அனைத்து ‘ஊ’ மற்றும் ‘னு’ பிரிவு பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கும் 2024-25ஆம் ஆண்டுக்கான மிகை ஊதியம் மற்றும் கருணைத் தொகை கீழ்வருமாறு வழங்கப்படும்:

1. இலாபம் ஈட்டியுள்ள பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் ‘C’ மற்றும் ‘னு’ பிரிவு தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு அந்தந்த நிறுவனங்களின் ஒதுக்கப்படக்கூடிய உபரி தொகையை கணக்கில் கொண்டு 8.33 விழுக்காடு மிகை ஊதியம் மற்றும் 11.67 விழுக்காடு கருணைத் தொகை என மொத்தம் 20 விழுக்காடு வரை மிகை ஊதியம் மற்றும் கருணைத் தொகை வழங்கப்படும்.

2. தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்கள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஆகிய பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தில் பணிபுரியும் தகுதியுடைய ‘ஊ’ மற்றும் ‘னு’ பிரிவு தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு 8.33 விழுக்காடு மிகை ஊதியம் மற்றும் 11.67 விழுக்காடு கருணைத் தொகை என மொத்தம் 20 விழுக்காடு மிகை ஊதியம் மற்றும் கருணைத் தொகை வழங்கப்படும்.

3. ஒதுக்கக்கூடிய உபரி தொகை இல்லாத பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் “C” மற்றும் ‘னு’ பிரிவு தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கு 8.33 விழுக்காடு குறைந்தபட்ச மிகை ஊதியம் மற்றும் 1.67 விழுக்காடு கருணைத் தொகை என மொத்தம் 10 விழுக்காடு மிகை ஊதியம் மற்றும் கருணைத் தொகை வழங்கப்படும். 4. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மற்றும் சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் ஆகியவற்றில் பணிபுரியும் தகுதியுடைய ‘ஊ’ மற்றும் ‘னு’ பிரிவு பணியாளர்களுக்கு 8.33 விழுக்காடு மிகை ஊதியம் மற்றும் 1.67 விழுக்காடு கருணைத் தொகை வழங்கப்படும்.

5. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தில் பணிபுரியும் தகுதியுடைய ‘C’ மற்றும் ‘D’ பிரிவு பணியாளர்களுக்கு 8.33 விழுக்காடு மிகை ஊதியம் வழங்கப்படும்.

6. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் தற்காலிக அடிப்படையில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு ரூ3,000/- கருணைத் தொகையாக வழங்கப்படும்.

இதனால், மிகை ஊதியம் பெறத் தகுதியுள்ள நிரந்தரத் தொழிலாளர்கள் குறைந்தபட்சம் ரூ.8400ஃ- மற்றும் அதிகபட்சம் ரூ.16800ஃ- வரை பெறுவர். மொத்தத்தில், தமிழ்நாடு அரசின் பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் 2,69,439 தொழிலாளர்களுக்கு மொத்தம் ரூ.376.01 கோடி மிகை ஊதியம் மற்றும் கருணைத் தொகையாக வழங்கப்படும். இது தவிர, பல்வேறு கூட்டுறவு அமைப்புகள் மற்றும் நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கான ஆணைகள் தனியே வெளியிடப்படும். அரசின் இந்த நடவடிக்கை, பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் மேலும் ஊக்கத்துடன் செயல்படவும், எதிர்வரும் விழாக்காலங்களை மகிழ்ச்சியுடன் கொண்டாடவும் வழிவகை செய்யும். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)



## கரூரில் நெரிசலில் உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு விசிக சார்பில் தலா ரூ.50,000 வழங்கவுள்ளோம்:

கரூரில் நெரிசலில் உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு விசிக சார்பில் தலா ரூ.50,000 வழங்கவுள்ளோம் என விசிக தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார். ‘கரூர் சம்பவத்தில் பாஜக, ஆர்.எஸ்.எஸ். அரசியல் ஆதாயம் தேடுகின்றன. கரூர் நெரிசல் சம்பவத்தில் எடப்பாடி பழனிசாமியும் அரசியல் செய்கிறார்’ என திருமாவளவன் தெரிவித்துள்ளார். மேலும் ஆளுநர் ஆர்.என். ரவி அதிகார வரம்புகளை மீறி வருகிறார் எனவும் ஆளுநருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சரியான பதிலடி கொடுத்து வருகிறார் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)



# மேற்கு வங்க மாநிலம் டார்ஜிலிங்கில் கனமழை, நிலச்சரிவு: 20 பேர் பலி, ஏராளமானோர் காயம்

மேற்குவங்கத்தின் டார்ஜிலிங்கில் பெய்த கனமழை மற்றும் நிலச்சரிவில் சிக்கி 20 பேர் உயிரிழந்தனர். மேற்குவங்க மாநிலத்தில் வடக்கில் இமயமலை பகுதிக்குள்பட்ட டார்ஜிலிங், கலிம்போங், கூச்பெஹார், ஜல்பைகுரி உள்ளிட்ட இடங்களில் கனமழை பெய்து வருகிறது. டார்ஜிலிங்கில் நேற்று முன்தினம் இரவு பெய்த கனமழையால் சாலைகள் வெள்ள நீரில் மூழ்கின. கனமழை காரணமாக டார்ஜிலிங் சதர், மிரிக், சுகியா போகாரி, ஜோர்பங்லோ, புல்பஜார் ஆகிய இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டது.


இதனால் சாலைகள் துண்டிக்கப்பட்டு போக்குவரத்து முடங்கி உள்ளது. மேற்குவங்கத்தையும், சிக்கிமையும் இணைக்கும் சாலைகள் மற்றும் டார்ஜிலிங் சிலிகுரியை இணைக்கும் முக்கிய வழித்தடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டுள்ளதால் இந்த பகுதிகளுக்கான இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன. நிலச்சரிவால் ஏராளமான வீடுகள் இடிந்து சேதமடைந்துள்ளன. ஏராளமானோர் நிலச்சரிவுகளில் சிக்கி உள்ளனர்.

உள்ளூர் காவல்துறையினர், மாவட்ட நிர்வாகம், மாநில பேரிடர் மீட்பு குழுவினர் மற்றும் தேசிய பேரிடர் மீட்பு குழுவினர் இணைந்து மீட்பு பணிகளில் ஈடுபட்டுள்ளனர். இதுவரை கனமழை, நிலச்சரிவில் சிக்கி 20 பேர் பலியாகி விட்டனர். ஏராளமானோர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களில் சிலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் பலி எண்ணிக்கை அதிகரிக்க கூடும் என அஞ்சபடுகிறது. மேலும் சிலர் மாயமாகி உள்ளனர்.

நிலச்சரிவில் சிக்கி உள்ளவர்களை மீட்கும் பணியும், மாயமானவர்களை தேடும்பணியும் முடுக்கிவிடப்பட்டுள்ளது. நவராத்திரி விடுமுறையை கொண்டாடுவதற்காக டார்ஜிலிங் சென்றுள்ள ஏராளமான சுற்றுலா பயணிகள் வெளியேற முடியாமல் சிக்கி தவித்து வருகின்றனர். நிலச்சரிவு காரணமாக டார்ஜிலிங்கில் உள்ள டைகர் ஹில், ராக் கார்டன் உள்ளிட்ட சுற்றுலா தலங்கள் மூடப்பட்டுள்ளது.

டார்ஜிலிங்கில் உயிரிழந்தவர்களுக்கு குடியரசு தலைவர் திரவுபதி முர்மு இரங்கல் தெரிவித்துள்ளார். அவர் தன் எக்ஸ் பதிவில், “டார்ஜிலிங்கில் உயிரிழந்தவர்களுக்கு என் ஆழ்ந்த இரங்கல்கள். மீட்பு பணிகள் வெற்றிகரமாக நடக்கவும், காயமடைந்தவர்கள் விரைவில் குணமடையவும் பிரார்த்திக்கிறேன்” என தெரிவித்துள்ளார். பிரதமர் மோடி தன் எக்ஸ் பதிவில், “டார்ஜிலிங்கில் ஏற்பட்ட உயிரிழப்புகளால் மிகவும் வேதனை அடைந்துள்ளேன். பாதிக்கப்பட்டவர்களுக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் வழங்க கடமைப்பட்டுள்ளோம்” என தெரிவித்துள்ளார். (ஐ)

# கல்வியே சிறந்தது





இன்றய உலகின் இன்றியமையாத ஒன்றாக திகழ்வது யாதெனில் கல்வியே ஆகும். எந்தவொரு சமூகத்தினரும் இக்கல்வியைக் கற்பதிலிருந்து விலகிச் செல்வது இன்றைய நவீன உலகில் மிகவும் அரிதாக காணப் படுகிறது. ஏனெனில் கல்வியின் சிறப்பை அனைத்து சமூகங்களும் புரிந்துள்ளன. இதனால் தான் இன்று கல்வியானது மனிதனின் அத்தியவசிய தேவையாக இருக்கிறது. கல்வியின் சிறப்பு பற்றி கூறும்போது கல்வி கற்றவன் எந்த இடத்திற்க்குச் சென்றாலும் அவன் பிற சமூகத்தால் மதிக்கப் படுகின்றான். இதற்க்கு காரணம் அவன் கற்ற கல்வியே

கற்றவனுக்கு தனது நாடும் ஊருமே அல்லாமல் எந்த நாடும் ஊரும் தன்னுடைய ஊராகும். இப்படி கல்வி கற்றவனின் சிறப்பு இருக்க ஒருவன் தான் மரணிக்கும் வரைகல்வி கற்க்காமல் இருந்து தனது காலத்தை கழிப்பது மிகவும் சிரமமானதாகும். இதனையே திருவள்ளுவர் மிகவும் அழகாக வர்ணித்திருக்கிறார்.

யாதானும் நாடு ஆமால் ஊர் ஆமால் என் ஒருவன்
சாந்துணையும் கல்லாதவாறுழூ என்று குறிப்பிடுகிறார்.

ஒருவன் தான் எவ்வளவு கல்வி கற்றாலும் அதனை செயல் வடிவில் தக்க வைத்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் அவன் கற்ற கல்வியின் பயன் அவனுக்கு கிடைக்கும். இல்லாவிடில் அவன் கற்ற கல்வியின் பயன் ஒன்றும் இல்லாமல் போய்விடும். இதனையும் திருவள்ளுவர் தனது திருக்குறளின் கல்வி என்ற அதிகாரத்தின் முதலாவது குறளில் தெளிவாக கூறுகின்றார்.

கற்க கசடறக் கற்பவை கற்ற பின்
நிற்க அதற்குத் தகழூ என்று கூறுவதிலிருந்து நாம் விளங்கிக் கொள்ளலாம்.

எண் என்று சொல்லப்படுவதும், எழுத்து என்று சொல்லப்படுவதும் இவை இரண்டினையும் அறிந்தோர் சிறப்பு மிக்க மக்களின் உயிர்களுக்கு கண் என்று சொல்லப் படுவர். இந்த அளவிற்க்கு கல்வியின் சிறப்பு எடுத்துரைக்கப் படுகின்றது.

கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்து
இரண்டு புண்ணுடையர் கல்லாதவர்

கற்றவரின் சிறப்புப் பற்றி கூறும் போது ஒருவனின் முகத்திலுள்ள கண்ணானது கற்றவருக்குரிய அடையாளம் என்று சொல்லப்படுகிற்து. அதே கண் இல்லாதவருக்கு முகத்தில் இரண்டு புண் இருப்பதாக குறிப்பிடப் படுகின்றது. இதன் மூலம் கல்வியின் சிறப்பும் அதனைக்கற்றவனின் சிறப்பும் கூறப்படுகின்றது.

கல்வி உடையவர் எல்லா மக்களிடமும் நன்றாக பழகிக் கொள்வதோடு மட்டுமல்லாமல் அவர்களுடன் சந்தோசமாக சேர்ந்து வாழ்வதையே விரும்புவர். இவர்களை பிரிக்கின்ற போது இனி நாம் எப்போது நான் மீண்டும் சேர்வோம்! என்ற நினைவிலேயே பிரிகின்ற தன்மை கற்றவரிடம் இருக்கும் தன்மையாகும்.

மனிதன் அயுள் முழுவதும் கற்றுக் கொண்டே இருக்க வேண்டும். கற்க மறுப்பவன் வாழ மறுப்பவன் ஆகின்றான். கல்வி என்பது ஆய்வு கல்வி மூலம் சூழலை அறிவை சமூகத்தை பண்பாடு மறபை ஆராய்ந்து கொள்ளலாம்.

கல்விக்காக உயிர் கொடுத்தோர் என்றும்
மரணிப்பதில்லை

மேற்கூரிய வாசகத்தை ஆராய்ந்த போது கற்றவனின் சிறப்பை கணலாம். அதாவது இக்கல்விக்காக உயிர் கொடுத்தோர் மரணிப்பதில்லை. என்பது கல்வி கற்றவர் மரணித்து விடுவார். ஆனால் அவர் கற்ற, கற்ப்பித்த கல்வி இந்த உலகம் அழியும் வரை இருந்தே ஆகும்.

இதனையே கல்விக்காக உயிர் கொடுத்தோர் மரணிப்பதில்லை எனகூறப்படுகிறது. இதற்க்கு சிறந்த உதாரணம் 1400 வருடங்களுக்கு முன் கற்ப்பித்த புனித இஸ்லாம் மார்க்கம் இன்ரு வரை நடைமுறைப் படுத்த படுகிறது. இதனைப் போதித்தவர் மரணித்து விட்டார். அவர் கற்ப்பித்தவை இன்றும் எம்மத்தியில் காணப்படுவதை காணலாம்.

தான் இன்புறுவது உலகின் பிறர் கண்டு
காமுருவர் கற்றறிந்தார்.

ஒருவன் தான் கற்ற கல்வியின் இன்பத்தை உணர்ந்தானாயின் அவன் மீண்டும் கற்பதையே விரும்புவான். இது கல்வியின் பண்பாக கருதப் படுகிறது.

மாந்தர்தம்கற்றனைத்தூரும்அறிவு என்பது வள்ளுவர் கண்ட வாழ்க்கை நெறியாகும். கல்வி மனித அடிப்படை உரிமைகளில் ஒன்று. அறிவியற் கல்வி, சமூக அறிவியற் கல்வி, அழகியல் கல்வி ஆகிய மூன்றும் வாழ்க்கைக்கு அவசியமானவை. ஒருவனுக்கு பெருமையையும் புகழையும் தரக்கூடிய செல்வம் கல்விச் செல்வமே அன்றி வேறில்லை.

கல்வி தொழிலுக்கு வழி காட்டுகிற்து. கல்வி என்பது வாழ்க்கை வாழ்வதற்க்காக உதவும் கருவியாகும். அறிவியலும் சமூகமும் வாழ்நாள் முழுவதும் தொடரும் கருவியாகும். வாழ்க்கையின் நோக்கம் என்ன என்பதை இனங்கண்டு அதற்கேற்ப கற்க வேண்டும். வாழ்க்கையை நெறிப் படுத்தவும் மேம் படுத்தவும் கல்வியை பயன் படுத்த வேண்டும்.

கல்வி கற்றவரிடம் ஒழுக்கம் பண்பு நேர்மை நீதி இவைகள் அனைத்தும் ஒருங்கே அமைந்து காணப்படும். எனவே கல்வியானது ஒரு மனிதனின் முக்கிய தேவையாக இருக்கிறது. எந்தவொரு சமூகமும் கல்வி இல்லாமல் இருப்பது இக்காலத்தைப் பொருத்த வரை மிகவும் தாழ்வாகவும் இழிவாகவும் கருதப் படும்.

எனவே இவ்வாறு பார்க்கும் போது கல்வியின் முக்கியத்துவத்தை அறிய முடிகின்றது. ஒருவன் கல்வி கற்றால் எவ்வாறு சமூகத்தில் மதிக்கப் படுகின்றான் என்பதை விளங்க முடியும் இவ்வாறு கல்வியை கற்று சமூகத்தில் சிறந்ததோர் பிரஜையாக வாழ கல்வி உதவுகின்றது.





# உக்ரைன் மக்களை வாட்டி வதைப்பதே ரஷ்யாவின் நோக்கம்





குளிர்காலத்தை மையமாக வைத்து ரஷ்யா தாக்குதல் நடத்தி வருவதாக உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி குற்றம்சாட்டி உள்ளார். நேட்டா அமைப்பு நாடுகளில் உக்ரைன் இணையக்கூடாது என்பதற்காக அதன் அண்டை நாடான ரஷ்யா கடந்த 2022ம் ஆண்டு பிப்ரவரி 24ம் தேதி முதல் அந்நாட்டின் மீது போர் தொடுத்து வருகிறது. இவ்விரு நாடுகளுக்கும்இடையே ஏற்பட்டிருக்கும் போர் 3 ஆண்டுகளை கடந்தும் தீவிரமாக நடைபெற்று வருகிறது. இதற்கிடையே அமெரிக்க அதிபர் டிரம்ப் இவ்விரு நாடுகளுக்கிடையே நடைபெற்றுவரும் போரை நிறுத்துவதில் கவனம் செலுத்தி வருகிறார். இந்நிலையில் ரஷ்யா உக்ரைன் மீது ஏவுகணைகள் மற்றும் ட்ரோன்களை கொண்டு ஒரே இரவில் பெரிய தாக்குதலை நடத்தியதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. இதில் குறைந்தது 5 பேர் கொல்லப்பட்டனர்.

அத்துடன் எரிசக்தி வசதிகள் உட்பட பொதுமக்களின் உடைமைகள் என அனைத்தும் சேதமடைந்தது. இந்த தாக்குதல் குறித்து உக்ரைன் மேயர் கூறுகையில், இந்த தாக்குதலில் உக்ரைனின் தலைநகரான லிவிவில் உள்ள ஒரு தொழிற் பூங்கா தீ பிடித்து எரிந்தது இதனால் நகரத்தில் சில பகுதிகள் மின்சாரம் இல்லாமல் இருந்தன.

ஞாயிற்று கிழமை அதிகாலை நடந்த இந்த தாக்குதலால் அதிகாரிகள் பல இடங்களில் ஏற்பட்ட தி விபத்துகளை எதிர்த்து போராடினர். அதுமட்டுமல்லாமல் தலைநகர் லிவிவில் மீது மிக பெரிய போர் தாக்குதல் நடத்த வாய்ப்புள்ளதாக அவசர சேவை மையம் தெரிவித்தது. உக்ரைனின் ராணுவ தொழில்துறை வசதிகள் மற்றும் எரிவாயு எரிசக்தி உட்கட்டமைப்பு இரவோடு இரவாக தாக்கியதாக ரஷ்யாவின் பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்திருந்தது. குளிர்கால போர் நெருங்கி வருவதாலும் சண்டையை முடிவிற்கு கொண்டுவருவதற்கான ராஜதந்திர முயற்சிகள் தோல்வி அடைந்தாலும் மாஸ்கோ உக்ரைன் மீதான தாக்குதல்களை முடுக்கி விட்டுள்ளது. இந்த ரஷ்யா உடனான போர் குறித்து எக்ஸ் பக்கத்தில் பதிவிட்டுள்ள அவர் ரஷ்யாவின் தொடர் தாக்குதல்களின் நோக்கம் குளிர்காலம் தொடங்குவதற்கு முன்பாக உக்ரைன் மக்களை வாட்டி வதைப்பதே என்று குறிப்பிட்டுள்ளார். ரஷ்யா வெளிப்படையாக தங்கள் நாட்டின் உள்கட்டமைப்பின் மீது தாக்குதல் நடத்தி வருவதாகவும் ஆனால் உலக நாடுகள் மவுனம் காப்பதாகவும் வேதனை தெரிவித்தார். (ஐ)

## காசா மீதான கட்டுப்பாட்டை விட மறுத்தால் அழிவை சந்திப்பீர்கள்: டிரம்ப் எச்சரிக்கை




இஸ்ரேல்-ஹமாஸ் போர் தொடங்கி அக்டோபர் 7ம் தேதியுடன் 2 ஆண்டுகள் நிறைவடைகிறது. இந்த போரில் பல்லாயிரக்கணக்கானோர் உயிரிழந்துள்ளனர்.

பல மாதங்களாக நீடிக்கும் போரை முடிவுக்கு கொண்டு வருவதற்கு அதிபர் டிரம்ப் 20 அம்ச திட்டத்தை அறிவித்தார். இதை இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு ஏற்று உள்ளார். இது பற்றி பரிசீலித்து வருவதாக ஹமாஸ் படையினர் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், சிஎன்என் தொலைக்காட்சிக்கு நேற்று பேட்டியளித்த டிரம்ப்,“ காசாவின் அதிகாரத்தையும் கட்டுப்பாட்டையும் கைவிட மறுத்தால் ஹமாஸ் முழுமையான அழிவை சந்திக்க நேரிடும். ஹமாஸ் அமைதிக்கு உறுதிபூண்டுள்ளதா என்பது விரைவில் தெரியவரும்” என்றார்.

ராணுவ தாக்குதலை முடிவுக்கு கொண்டுவருவதற்கு அமெரிக்காவின் பரந்த திட்டத்திற்கு நெதன்யாகு உடன்படுகிறாரா என்று கேட்ட போது “அவர்(நெதன்யாகு) எங்களுடன் இருக்கிறார்” என்றார். இது தொடர்பாக சமூக ஊடகத்தில் அவர் பதிவிடுகையில், அமைதி ஒப்பந்தம் ஏற்பட ஒரு வாய்ப்பை வழங்குவதற்காக தாக்குதலை தற்காலிகமாக நிறுத்திய இஸ்ரேலுக்கு நன்றி தெரிவிப்பதாக குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## மோதினால் கடும் விளைவுகள் ஏற்படும்: இந்தியாவை மிரட்டும் பாகிஸ்தான்





இந்தியா பாகிஸ்தானுடன் மோதினால் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என பாகிஸ்தான் எச்சரித்துள்ளது. குஜராத் மாநிலம் பூஜ் நகரில் உள்ள ராணுவ தளத்தில் கடந்த வாரம் நடந்த விஜயதசமி விழாவில் ஒன்றிய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் கலந்து கொண்டார். அப்போது பேசிய ராஜ்நாத் சிங், “சர் க்ரீக் பகுதியில் பாகிஸ்தான் ஏதேனும் தவறான முயற்சிகளில் ஈடுபட்டால், அது வரலாற்றையும், புவியியலையும் மாற்றக்கூடிய வகையில் பதிலடி கொடுக்கப்படும்” என எச்சரித்திருந்தார்.

இதேபோல், இந்திய ராணுவ தலைமை தளபதி ஜெனரல் உபேந்திர திவேதி, “ பயங்கரவாதத்துக்கு ஆதரவளிப்பதை நிறுத்தாவிட்டால் உலக வரைபடத்தில் இருந்து பாகிஸ்தான் அழிக்கப்படும்” என கடுமையாக எச்சரிக்கை விடுத்திருந்தார். இந்தியாவின் எச்சரிக்கை தொடர்பாக பாகிஸ்தான் மிரட்டல் விடுத்துள்ளது.

இதுகுறித்து பாகிஸ்தான் ராணுவ அமைச்சர் கவாஜா ஆசிப் வெளியிட்டுள்ள அறிக்கையில், “இந்திய ராணுவம் மற்றும் அரசியல் தலைவர்களின் சமீபத்திய அறிக்கைகள், அவர்களின் இழந்த நம்பகத்தன்மையை மீட்டெடுப்பதற்கான முயற்சி. வருங்காலங்களில் பாகிஸ்தானுடன் இந்தியா எந்த விதமான ராணுவ மோதல்களிலும் ஈடுபட கூடாது. மீறி ஈடுபட்டால் முழு பலத்துடன் இந்தியாவுக்கு பதிலடி தருவோம்” என மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## 2025-ம் ஆண்டுக்கான அமைதிக்கான நோபல் யாருக்கு?




2025ம் ஆண்டுக்கான நோபல் பரிசுகள் இன்று முதல் அறிவிக்கப்பட உள்ள நிலையில் நோபல் விருதுக்கான தேர்வு முறைகள் தெரிவிக்கப்பட்டுள்ளது. அமைதிக்கான நோபல் பரிசு என்பது பெருமை மிகு விருதான இது சர்வதேச அளவிலான சமூக சேவகர்கள், பொதுநல அரசியல் தலைவர்கள், போர் நிறுத்த நடவடிக்கை குழு உறுப்பினர்களுக்கு 1903ம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் வேதியியல், இயற்பியல், உடலியல், மருத்துவம், இலக்கியம் மற்றும் அமைதி ஆகிய துறைகளில் நோபல் பரிசுக்கு உரியவரை நார்வே நாடாளுமன்றம் நியமிக்கும் சிறப்பு குழு தேர்வு செய்து வருகிறது. இந்த ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு வரும் 10ம் தேதி அறிவிக்கப்பட உள்ளது. இதற்கு மொத்தம் 338 பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

1895ம் ஆண்டு ஸ்வீடன் தொழிலதிபர் ஆல்ஃபிரட் நோபலின் உயிலில் குறிப்பிடப்பட்டுள்ள விளக்கத்திற்கு ஒத்துள்ள ஒருவருக்கு அமைதிக்கான நோபல் வழங்கப்படுகிறது. அதன்படி ஒவ்வொரு ஆண்டும் நாடுகளுக்கு இடையேயான ஒற்றுமையை மேம்படுத்துவதற்கும் தடைகளை திரும்ப பெறுவதற்கும் அல்லது குறைப்பதற்கும் அமைதி மாநாடுகளை நிறுவுவதற்கும், ஊக்குவிப்பதற்கு பங்களிப்பவர் அமைதிக்கான நோபல் பரிசை பெற தகுதி உடையவராவார். நாடுகள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், உலகத்தலைவர்கள், வரலாறு, சமூக அறிவியல், சட்டம் மற்றும் தத்துவப் பல்கலை கழக பேராசிரியர்கள், முன்னாள் அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவர்கள் உள்ளிட்டவர்கள் நோபல் பரிசுக்கான பெயரை முன்மொழியலாம். நோபல் தேர்வுக் குழு பரிந்துரைக்கப்பட்ட நபர்கள் குறித்து ஆய்விட்டு, ஆலோசித்து குறுகிய பட்டியலை உருவாக்குகிறார்கள்.

பின்னர் ஒவ்வொரு வேட்பாளரும் நிரந்தர ஆலோசகர்கள் மற்றும் நிபுணர் குழுவால் மதிப்பீடு செய்யப்படுவார்கள். இந்த தேர்வுக் குழு மாதத்திற்கு ஒரு முறை கூடி பரிந்துரைகள் பற்றி விவாதித்து ஒருமித்த கருத்தை எட்ட முயலும். பரிந்துரைப் பட்டியல் ரகசியமாக வைக்கப்பட்டிருந்தாலும், அவற்றை வெளியிடும் சுதந்திரம் பரிந்துரைப்பவர்களுக்கு மட்டுமே உண்டு. இந்த ஆண்டு வெளியிடப்பட்ட பெயர்களில் சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் நேட்டோ, ஹாங்காங் ஆர்வலர் சௌ ஹாங்-டங், மற்றும் கேனடாவின் மனித உரிமை வழக்கறிஞர் இர்வின் கோட்லர் ஆகியோர் அடங்குவர். கம்போடியா, இஸ்ரேல், பாகிஸ்தான் தலைவர்கள் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பை பரிந்துரைத்ததாக கூறியுள்ளனர். ஆனால் ஜனவரி 31 என்ற காலக்கெடுவுக்கு பிறகு அவர்கள் பரிந்துரை செய்துள்ளதால் நடப்பு ஆண்டுக்கான விருதுக்கு டிரம்ப்பின் பெயர் பரீசீலிக்கப்பட்டதா என்ற கேள்வி எழுந்துள்ளது.

டிரம்ப் தற்போது சர்வதேச உறவுகளை சீர்குலைத்து வருகிறார் என குற்றம்சாட்டும் நோபல் விருது குழு அமெரிக்க அதிபர் தனது கொள்கைகளை மாற்றிக்கொண்டால் மட்டுமே நோபல் வசப்பட வாய்ப்பு ஏற்படும் என கூறியுள்ளது. இந்த முறை நோபல் பரிசுக்கு மனித உரிமை அமைப்புகள், பத்திரிகையாளர்கள், ஐநா போன்ற அமைப்புகளை குழுவினர் முன்னிலைப்படுத்தி இருக்கலாம் என கூறப்படும் நிலையில் ஆச்சரியமிக்க அறிவிப்புகளையும் வெளியிட வாய்ப்புள்ளதாக ஒரு சாரார் கூறுகின்றனர். அமைதிக்கான நோபல் பரிசு பெறுவோருக்கு பதக்கம், சான்றிதழுடன் இந்திய மதிப்பீட்டில் சுமார் 10 கோடி பரிசுத்தொகை வழங்கப்படும். 2025ம் ஆண்டுக்கான அமைதிக்கான நோபல் பரிசு யாருக்கு என்ற மில்லியன் டாலர் கேள்விக்கான விடை வரும் 10ம் தேதி கிடைத்துவிடும். (ஐ)

## வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மோட்டர் சைக்கிள் விபத்துக்குள்ளானதில் இளைஞர் ஒருவர் மரணமடைந்துள்ளதுடன், இருவர் காயமடைந்துள்ளனர் என்று நெளுக்குளம் பொலிஸார் தெரிவித்தனர். இன்று பிற்பகல் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, இராசேந்திரகுளம் பகுதியில இருந்து நெளுக்குளம் நோக்கி மோட்டார் சைக்கிள் ஒன்றில் மூன்று இளைஞர்கள் பயணித்துள்ளனர்.

அந்த மோட்டர் சைக்கிள் இராசேந்திரகுளம் பாடசாலை முன்பாகவுள்ள பஸ் தரிப்பு நிலையத்துடன் கட்டுப்பாட்டை இழந்து மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தில் மோட்டர் சைக்கிளில் பயணித்த இளைஞர் ஒருவர் மரணமடைந்துள்ளதுடன், இருவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலயில் சிகிச்சைக்கக அனுமதிக்கப்பட்டுள்ளனர். சம்பவத்தில் சாம்பல்தோட்டம் பகுதியைச் சேர்ந்த கோபால்ராஜ் நிலக்சன் (வயது 18) என்பவரே மரணமடைந்தவராவார்.

இது தொடர்பில் நெளுக்குளம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## போதைப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதிரடிப் படையினர் குறித்த கைது நடவடிக்கையை நேற்று இரவு முன்னெடுத்துள்ளனர்.

குறித்த சந்தேகநபரிடமிருந்து 760 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருள் உட்பட ஒரு தொகை பணமும் மீட்கப்பட்டுள்ளது. பெரியநீலாவணை பகுதி வீ.சி. வீதியைச் சேர்ந்த 36 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். இதேவேளை, கல்முனை தலைமையகப் பொலிஸ் பிரிவிற்குபட்பட்ட கல்முனைக்குடி - 3 பிரிவு கடற்கரை வீதியிலுள்ள பள்ளிவாசல் அருகில் 27 வயதுடைய சந்தேகநபர் 1800 மில்லி கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் கல்முனை நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்த கல்முனை விசேட அதிரடிப் படையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## காரணத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

2024இல் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கான செலவை விட 72 சதவீத அதிகரிப்பாகும். இவ்வாறு பாரியளவு நிதி ஒதுக்கீட்டுக்கான காரணத்தை ஜனாதிபதியும், அரசும் மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும்." - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"2024ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கான செலவுகள் 6.6 பில்லியன் ரூபாவாகும். அது 2025இல் அநுரகுமார திஸாநாயக்கவின் முதலாவது வரவு - செலவுத் திட்டத்தில் 2.9 பில்லியன் வரை குறைக்கப்பட்டது. அது தொடர்பில் அரசால் பாரிய பிரசாரங்களும் முன்னெடுக்கப்பட்டன. ஆனால், தற்போது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள 2026ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தில் அது 11.37 பில்லியனாக உயர்வடைந்துள்ளது. 2024இல் ரணில் விக்கிரமசிங்கவுக்கான ஒதுக்கப்பட்டிருந்த நிதியை விட இது 72 சதவீத அதிகரிப்பாகும். ஆட்சியைப் பொறுப்பேற்ற பின்னர் சில வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதற்கு தமக்குக் குறிப்பிட்டளவு நிதி தேவை ஏற்படும் என்பதை இப்போதாவது ஜனாதிபதி அநுரகுமார திஸ ாநாயக்க புரிந்து கொண்டிருப்பார் என நம்புகின்றோம்.

2024இல் பிரதமருக்கான நிதி ஒதுக்கீடு 1.15 பில்லியனாகும். 2025இல் இது 1.17 பில்லியனாக அதிகரிக்கப்பட்டது. 2026க்காக நிதி ஒதுக்கீடு 0.9 பில்லியனாகக் குறைவடைந்துள்ளது. அதற்காக பிரதமருக்கு நன்றி தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆனால் ஜனாதிபதிக்கான நிதி ஒதுக்கீடு ஓராண்டுகள் சுமார் 6 பில்லியன் ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்கு ஜனாதிபதியின் பதில் என்ன? கடந்த காலங்களில் ஜனாதிபதிகளுக்கு நிதி ஒதுக்கப்பட்ட போது அவற்றை கடுமையாக விமர்சித்த ஜே.வி.பி.யினர் இப்போதாவது யதார்த்தத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். தமது சட்டைப் பைகளை நிரப்பிக் கொள்வதற்காக எந்தவொரு ஜனாதிபதியும் நிதியை ஒதுக்கிக்கொள்வதில்லை.

அது மாத்திரமின்றி கடந்த காலங்களில் நிதி அமைச்சு ஜனாதிபதியின் கீழிருப்பது முற்றிலும் தவறு என்றும் இவர்கள் கூறினர். ஆனால், இன்று என்ன நடந்திருக்கின்றது? பொருளாதாரம் தொடர்பில் நிபுணத்துவம் அற்ற ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தற்போது நிதி அமைச்சைத் தன்வசப்பத்தி, தனக்கேற்றவாறு நிதி ஒதுக்கீடுகளை செய்து கொண்டிருக்கின்றார். இவ்வாறான செயற்பாடுகளுக்கு ஜனாதிபதியும் அரசும் நிச்சயம் பதிலளிக்க வேண்டும்." - என்றார்.

## யாழ்ப்பாணத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மோசடி இடம்பெற்றமை தொடர்பான விசாரணைகளின் அடிப்படையில் அந்தக் காணியின் உறுதி முடிப்பை நிறைவேற்றிய சட்டத்தரணி இன்று திங்கட்கிழமைகைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சட்டத்தரணியை விசாரணைகளின் பின்னர் , பொலிஸார் மல்லாகம் நீதிவான் நீதிமன்ற நீதிவானின் முன்னிலையில் முற்படுத்திய வேளை, அவரை 10 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணையில் செல்ல அனுமதித்த மன்று, வெளிநாட்டுப் பயணத் தடையையும் விதித்துள்ளது.

அதேவேளை, மேற்படி சட்டத்தரணியின் வீட்டுக்குள் நேற்று ஞாயிற்றுகிழமை பொலிஸார் அத்துமீறி நுழைந்து எவ்விதமான நீதிமன்றக் கட்டளையும் இன்றி தேடுதல் நடத்தி அடாத்தாக நடந்து கொண்டனர் எனவும், பொலிஸாரின் இந்தச் செயல்களைக் கண்டித்து நாளை செவ்வாய்க்கிழமை சட்டத்தரணிகள் போராட்டம் நடத்தவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற காணி மோசடி வழக்குகளில் சட்டத்தரணிகள் சிலர் நேரடியாகத் தொடர்புபட்டுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ள நிலையில் அவர்களைக் கைது செய்வதற்குத் தாம் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர் என்று பொலிஸ் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

# இரு முதியவர்கள் விபத்தில் காயம்!

*யாழ்ப்பாணம், ஒக். 06*

*யாழ். பலாலி வீதி - புன்னாலைக்கட்டு பகுதியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் இரு முதியவர்கள் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.*

*இராணுவ வாகனம் ஒன்று யாழ்ப்பாணத்தில் இருந்து பலாலி நோக்கி சென்று கொண்டிருந்த போது, இராணுவ வாகனத்தின் பின்னால் வந்த லொறி ஒன்று இராணுவ வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்ட வேளை பலாலி பக்கம் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் மீது அந்த லொறி மோதியது.*

*இந்த விபத்தின் போது மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு முதியவர்களே படுகாயமடைந்துள்ளனர். விபத்து சம்பவம் குறித்து விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.*

# சர்வதேச தொல்பொருள் ஆராய்ச்சி நிறுவனம் திறப்பு



வரலாற்று சிறப்புமிக்க சோமாவதி விகாரையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தொல்பொருள் அருங்காட்சியகம் மற்றும் சர்வதேச தொல்பொருள் ஆராய்ச்சி நிறுவனம் அடங்கிய இரண்டு மாடி கட்டிடத்தை திறந்து வைக்கும் நிகழ்வு ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க தலைமையில் திங்கட்கிழமை (06) முற்பகல் நடைபெற்றது.

புத்தர் பெருமானின் புனித தந்ததாது வைக்கப்பட்டுள்ள வரலாற்று சிறப்பு மிக்க பொலொன்னறுவை சோமாவதி விகாரையை வழிபட வரும் மற்றும் கல்வி ஆராய்ச்சிப் பணிகளில் ஈடுபடுபவர்களின் வசதிக்காக, வரலாற்று சிறப்புமிக்க சோமாவதி ரஜமஹா விகாராதிபதி மஹாவிஹார வன்சிக சியாமோபாலி மஹா நிகாயாவின் மல்வத்து தரப்பின் பதிவாளர் அதி வணக்கத்துக்குரிய கலாநிதி பஹமுனே ஸ்ரீ சுமங்கல நாயக தேரரின் ஆலோசனையின் படி ரத்ன சமூஹ நிறுவனத்தின் தலைவர் தேசமான்ய மித்ரபால லங்கேஸ்வரவின் முழுமையான நிதியுதவியுடன், தொல்பொருள் திணைக்களத்தின் திட்டமிடல் மற்றும் மேற்பார்வையின் கீழ் இந்த இரண்டு மாடி கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

வரலாற்று சிறப்புமிக்க சோமாவதி விகாரைக்குச் சென்ற ஜனாதிபதி சமய வழிபாடுகளில் ஈடுபட்டு ஆசி பெற்றார்.

அதன் பின்னர் பெயர் பலகையை திறந்து வைத்து, தொல்பொருள் அருங்காட்சியகம் மற்றும் சர்வதேச தொல்பொருள் ஆராய்ச்சி நிறுவனம் அடங்கிய புதிய இரண்டு மாடி கட்டிடத்தை திறந்து வைத்த ஜனாதிபதி அங்கு வைக்கப்பட்டுள்ள புத்தர் சிலை மற்றும் தந்ததாதுவுக்கு மலர் வைத்து சமய வழிபாடுகளில் ஈடுபட்டார்.

ரத்ன சமூஹ நிறுவனத்தின் தலைவர் தேசமான்ய மித்ரபால லங்கேஸ்வர இந்நிகழ்வில் ஜனாதிபதிக்கு நினைவுப் பரிசொன்றையும் வழங்கினார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் கலாநிதி ஹினிதும சுனில் செனெவி மகத்தான தொல்பொருள் மதிப்புமிக்க சோமாவதி விகாரையின் வரலாற்றில் நுழைவதற்கான வாயிலாக இந்தப் புதிய தொல்பொருள் அருங்காட்சியகம் மற்றும் சர்வதேச தொல்பொருள் ஆராய்ச்சி நிறுவனம் அமையும் என்று குறிப்பிட்டார்.

அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துடன் இணைந்த முறையான அபிவிருத்தித் திட்டத்தின் விளைவாக வரலாற்று சிறப்புமிக்க சோமாவதி விகாரையை உலக மக்களுக்கும் இலங்கை மக்களுக்கும் வழங்கும் நிகழ்ச்சித் திட்டம் இதனூடாக நிறைவேற்றப்படுவதாகவும் அமைச்சர் இங்கு மேலும் தெரிவித்தார். (ஐ)

# 1500 கிலோ கிராம் வாகனத்தை காதில் கட்டி இழுத்து மகிழ்விப்பு



சர்வதேச முதியோர் தினத்தையொட்டி உலக சாதனையாளர் செ.திருச்செல்வத்தால் கைதடி முதியோர் இல்லத்தில் சாகச நிகழ்வொன்று நடத்தப்பட்டுள்ளது.

முதியோர் இல்ல வளாகத்தில் 1500 கிலோகிராம் எடை கொண்ட வாகனத்தை 50 மீற்றர் தூரம் தனது காதில் கட்டி இழுத்து முதியோர் இல்ல முதியவர்களை திங்கட்கிழமை (06) காலை மகிழ்வித்திருந்தார்.

62வயதான மட்டுவிலைச் சேர்ந்த செ.திருச்செல்வம் 5உலக சாதனைகளுக்கு சொந்தக்காரன் என்பது குறிப்பிடத்தக்கது.அவர் தனது தாடி,தலை முடி,காது,உடல் ஆகியவற்றில் கனரக வாகனங்களைக் கட்டி இழுத்து சோழன் மற்றும் கலாம் உலக சாதனைப் புத்தகங்களில் இடம்பிடித்துள்ளார். (ஐ)

# கலைப்பீட இளங்கலைமாணி ஆய்வு மாநாடு

யாழ்ப்பாணம், ஒக். 06

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கலைப்பீடத்தின் ஐந்தாவது இளங்கலைமாணி ஆய்வு மாநாடு நாளைமறுதினம் புதன்கிழமை நடைபெறவுள்ளது.

பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகவிருக்கும் இந்த ஆய்வுமாநாட்டில் முதன்மை விருந்தினராக பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா கலந்துகொள்ளவுள்ளார். ஆய்வு மாநாட்டுக்கு கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம் தலைமை தாங்கவுள்ளார்.

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞானத்துறை ஓய்வுநிலைப் பேராசிரியர் எஸ். சந்திரபோஸ் திறப்புரையை ஆற்றவுள்ளார்.

இம்முறை நடைபெறும் ஐந்தாவது மாநாடு "வெவ்வேறு துறைகளை இணைத்து மாற்றங்களை வலுவூட்டுவதற்காக அறிவைச் செயற்படுத்துதல்" என்னும் தொனிப்பொருளோடு 16 ஆய்வுத் தடங்களில் நடைபெறவுள்ளது.

இளங்கலைமாணி பட்டக்கற்கையின் இறுதியாண்டில் மாணவர்கள் நிறைவுறுத்திய ஆய்வுகளின் அளிக்கையாக இந்த மாநாடு அமையவுள்ளது.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.10.2025 வெளியிடப்பெற்றது.